# அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்

**ந.க.எண்.444 /1433/அ2 நாள். 20.09.2023**

## வேலை வாய்ப்பு அறிவிப்பு

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் காலியாக உள்ள கீழ்காணும் பணியிடங்களுக்கு பணியாளர்களை நியமனம் செய்ய 01.07.2023 அன்று 18 வயது பூர்த்தியடைந்த 45 வயதுக்குட்பட்ட, இந்து மதத்தை சார்ந்த தகுதியுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்படுகிறது.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பதிவஞ்சல் மூலம் வந்து சேர வேண்டிய கடைசி நாள்.25.10.2023 மாலை 05.45 மணி வரை

**விண்ணப்பங்கள் பதிவஞ்சலில் அனுப்ப வேண்டிய முகவரி:**
இணை ஆணையர்/செயல் அலுவலர், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம், மண்ணச்சநல்லூர் வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்–621 112.

| வ.எண் | பணியிடத்தின் பெயர் | ஊதிய விகிதம் | காலிப் பணியிடங்கள் எண்ணிக்கை | கல்வித் தகுதிகள் |
|---|---|---|---|---|
| 1. | காவலர் | ரூ.15900–50400 | 25 | தமிழில் எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டும். |
| 2. | காவலர் (தொகுப்பூதியம்) | ரூ.10,000 | 25 | |

திருக்கோயில் வலைதளத்தில் வெளியிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தில் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பப் படிவத்தை பதிவிறக்கம் செய்யவும் இதர நிபந்தனைகளை அறிந்து கொள்ளவும் திருக்கோயில் வலைதள முகவரி https://samayapurammariamman.hrce.tn.gov.in/

## பொது நிபந்தனைகள்

1. இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்.
2. காவலர் பணியிடத்திற்கு விண்ணப்பப்பிவர்கள் நன்கு ஆரோக்கியமான உடல் நலத்துடன், தீயபழக்க வழக்கங்கள் மற்றும் தொற்று நோயற்றவர் என்றும், நல்ல மனநிலை உடையவர் என்பதற்கான விபரங்கள் குறிப்பிட்டு மருத்துவர் சான்றுடன் விண்ணப்பிக்க வேண்டும்.
3. 01.07.2023 அன்று 18 வயது பூர்த்தி அடைந்தவர்களாகவும், 45 வயதிற்கு உட்பட்டவர்கள் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்.
4. நீதிமன்றத்தில் தண்டனை பெற்றவர்கள், குற்ற நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டவர்கள் ஜாமீனில் கட்டுப்படுத்தப்பட்டவர்கள், திருக்கோயிலுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தவர்கள், அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள், எவ்வித அறநிறுவனத்திலிருந்து நீக்கப்பட்டவர்கள்/ விலக்கப்பட்டவர்கள், தீர்ப்புக் கடனாளிகள் ஆகியோர் விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள்.

5. பணி நியமனம் அரசாணை எண்.114/சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள்(அநி4-2)துறை/நாள்.03.09.2020 மூலம் வெளியிடப்பட்ட தமிழ்நாடு இந்து சமய அறநிலையங்கள் பணியாளர்கள் (Conditions of service) விதிகள் 2020-ன் படியானது. இந்த அரசாணையை இந்த அறிவிப்பின் பகுதியாக அறிந்து கொள்ளவும். http://www.stationeryprinting.tn.gov.in/extraordinary/2020/362_Ex_III_1a.pdf என்ற இணைப்பில் இந்த அரசாணையை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

   TOURISM, CULTURE AND RELIGIOUS ENDOWMENTS DEPARTMENT THE TAMILNADU HINDU RELIGIOUS INSTITUTIONS EMPLOYEES (CONDITIONS OF SERVICE) RULES, 2020

   [G.O.Ms.No.114, Tourism Culture and Religious Endowments (RE4-2), Department dated 3rd September 2020]

6. இந்த பணி நியமன நடவடிக்கை அனைத்தும் ஏற்கனவே நடைமுறையில் உள்ள 1959-ம் வருடத்திய இந்து சமயம் மற்றும் அறக் கட்டளைகள் சட்டம் மற்றும் அதன் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகள், அரசாணைகள், சுற்றறிக்கைகள் மற்றும் நீதிமன்ற உத்திரவுகளுக்கும் கட்டுப்பட்டதாகும்.
7. எந்தவொரு மத நிறுவனம் மற்றும் அறக்கட்டளையின் நலனுக்கு எதிரானவர்கள், எந்த வகையிலும் திருக்கோயிலுக்கு பாக்கி வைத்துள்ளவர்கள் விண்ணபிக்கத் தகுதி அற்றவர்கள்.
8. திருக்கோயில் அலுவலகம் மூலம் வெளியிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தில் மட்டுமே பூர்த்தி செய்து விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பத்தில் காவலர் காலமுறை ஊதியத்திற்கு மட்டும் விண்ணப்பிக்க விரும்புபவர் அதற்கான கட்டத்தில் ✓ குறியிட வேண்டும். காவலர் தொகுப்பூதியத்திற்கு மட்டும் விண்ணப்பிக்க விரும்புபவர் அதற்கான கட்டத்தில் ✓ குறியிட வேண்டும். இரண்டிற்கும் விண்ணப்பிக்க விரும்புபவர் இரண்டு கட்டங்களிலும் ✓ குறியிட வேண்டும். ஒரே நேர்முகத்தேர்வு தான் நடத்தப்படும், எனவே தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்பத் தேவையில்லை.
9. நிர்ணயிக்கப்பட்ட காலக் கெடுவான 25.10.2023-க்குள் பெறப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படும். பதிவஞ்சல் பெறப்பட்ட தேதியே விண்ணப்ப தேதியாக எடுத்துக் கொள்ளப்படும்.
10. விபரங்கள் முழுமையாக பூர்த்தி செய்யப்படாமலும், கேட்கப்பட்ட சான்றுகள் இணைக்கப்படாமலும், உரிய கல்வித் தகுதி மற்றும் வயது தகுதிகள் இல்லாத விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. இணைக்கப்படும் சான்றுகளில் அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் சான்றொப்பம் பெற்று அனுப்பப்பட வேண்டும்.
11. விண்ணப்பங்களைப் பரிசீலித்து தகுதியான நபர்களுக்கு மட்டுமே நேர்காணலுக்கு அழைப்பு அனுப்பப்படும். நேர்காணலுக்கு

விண்ணப்பதாரர்கள் குறிப்பிட்ட நாளில்/ நேரத்தில் தனது சொந்த செலவில்/பொறுப்பில் அனைத்து அசல் சான்றுகளுடனும் ஆஜராக வேண்டும். எவ்வித காலதாமதமோ/காரணங்களோ ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

12. விண்ணப்பதாரர்களால் வழங்கப்படும் சான்றுகள் அனைத்தும் சம்பந்தப்பட்ட துறைகளின் பரிசீலனைக்கு உட்படுத்தப்படும்.
13. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை உரிய சான்றுகளுடன் பதிவஞ்சலில் மட்டும் அனுப்ப வேண்டும். அஞ்சல் உறையின் மேல் பெறுநர் முகவரியாக "இணை ஆணையர்/செயல் அலுவலர், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்–621112" என்ற முகவரிக்கு பதிவஞ்சல் மூலமாக மட்டும் அனுப்ப வேண்டும். விண்ணப்பத்துடன் ரூ.25/– அஞ்சல் வில்லை ஒட்டப்பட்ட, சுயவிலாசமிட்ட ஒப்புதல் அட்டையுடன் கூடிய உறை நேர்காணலுக்கான அழைப்பாணை அனுப்பும் பொருட்டு இணைக்கப்பட வேண்டும்.
14. விண்ணப்பதாரர் தான் வசிக்கும் பகுதிக்கு உட்பட்ட காவலர் நிலையத்தில் தன் மீது எந்த ஒரு குற்ற வழக்கும் நிலுவை இல்லை என்பதற்கான சான்றினை விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.
15. தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர் தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை சட்ட விதிகளுக்கு உட்பட்டும், திருக்கோயிலில் தொன்று தொட்டு கடைபிடிக்கப்படும் பழக்க வழக்கங்கள், நடைமுறைகள் மற்றும் திருக்கோயில் நிர்வாகத்தால் அவ்வப்போது பிறப்பிக்கப்படுகின்ற உத்தரவுகளுக்கு கட்டுப்பட்டும் காவல் பணிபுரிய கடமைப் பட்டவர்கள்.
16. விண்ணப்பதாரரால் தெரிவிக்கப்பட்ட விபரங்கள் அனைத்தும் சரியானவை என உறுதி அளிக்க வேண்டும். தவறான தகவல்கள் அல்லது போலியான ஆவணங்கள் ஏதேனும் அளித்து பணி நியமன ஆணை பெறப்படும் பட்சத்தில், எவ்வித முன்னறிவிப்புமின்றி பணி நீக்கம் செய்தும் சட்டரீதியான நடவடிக்கைகளுக்கும் உட்படுத்தப்படுவர்.
17. விண்ணப்பத்தில் பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம் நன்றாக ஒட்டப்பட வேண்டும்
18. விண்ணப்பத்துடன் கீழ்கண்ட சான்றிதழ்களை வரிசைக்கிரமமாக இணைத்து அனுப்ப கேட்டுக் கொள்ளப்படுகிறது.
    1. முகவரிச் சான்று நகல் இணைக்கப்பட வேண்டும். (வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அடையாள அட்டை, குடும்ப அட்டை, ஓட்டுநர் உரிமம், வங்கி பாஸ் புத்தகத்தின் முன் பக்கம் போன்றவற்றில் ஏதேனும் ஒன்றின் நகல்)
    2. பிறந்த நாள் குறித்த சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்.
    3. சாதிச் சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்.
    4. கல்வி தகுதிக்கான சான்றுகளின் நகல்கள் இணைக்கப்பட வேண்டும்.
    5. அரசு மருத்துவரிடமிருந்து பெறப்பட்ட உடற்தகுதி சான்று இணைக்கப்பட வேண்டும்.

6. குற்ற வழக்கு ஏதும் இல்லை என்பதற்கான காவல்துறை சான்று இணைக்கப்பட வேண்டும்.
7. அரசிதழ் பதிவு பெற்ற அரசு அலுவலர்கள் இருவரிடமிருந்து பெறப்பட்ட இரண்டு நன்னடத்தை சான்றுகள் இணைக்கப்பட வேண்டும்.
8. முன் அனுபவ சான்று இருப்பின் நகல் இணைக்கப்பட வேண்டும்.
9. வாக்காளர் அடையாள அட்டை நகல் இணைக்கப்பட வேண்டும்.
10. ஆதார் அடையாள அட்டை நகல் இணைக்கப்பட வேண்டும்.
11. இதர தகுதிகள் இருப்பின் அதற்கான சான்று இணைக்கப்பட வேண்டும்.
12. ரூ.25/- மதிப்புள்ள அஞ்சல் வில்லை ஒட்டப்பட்ட, சுய விலாசம் இடப்பட்ட, ஒப்புதல் அட்டையுடன் கூடிய அஞ்சல் உறை (26X 11 செ.மீ Envelope Cover) இணைக்கப்பட வேண்டும்.

சான்றுகள் சரிபார்ப்பு படிவத்தில் சான்று இணைக்கப்பட்ட விபரம் குறித்து கண்டிப்பாக நிரப்பப்பட்டிருக்க வேண்டும்.

இதர விபரங்களை symmariamman@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு விண்ணப்பித்தும், 0431-2670460 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டும் தெரிந்து கொள்ளலாம். கீழ்க்கண்ட இணையத் தளத்தில் மாதிரி விண்ணப்பப் படிவம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

https://samayapurammariamman.hrce.tn.gov.in/

**(ஒம்.) சி.கல்யாணி,எம்.எல்.**

**இணை ஆணையர்/செயல் அலுவலர்/தக்கார்**

அண்மைக் காலத்தில் எடுக்கப்பட்ட பாஸ்போட் சைஸ் புகைப்படத்தை ஒட்டவும்

**இந்து சமய அறநிலையத்துறை**
**அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் சமயபுரம்**
**காவலர் பணியிடத்திற்கான விண்ணப்பம்**
(பதிவஞ்சலில் அனுப்ப வேண்டும்)

| | | | |
|---|---|---|---|
| 1. | பெயர் | : | |
| 2. | விண்ணப்பிக்கும் பணியிடத்திற்கான பெயர் | | 1.காவலர் (காலமுறை ஊதியம்) ☐<br>2.காவலர்(தொகுப்பூதியம்) ☐ |
| 3. | பாலினம் | : | |
| 4. | தந்தை/ கணவர்/ பாதுகாவலர் பெயர் | : | |
| 5. | நிலையான முகவரி<br>(சான்று இணைக்கப்படவேண்டும்) | : | |
| 6. | அலைபேசி எண் | : | |
| 7. | வாட்ஸ்அப் எண் | : | |
| 7. | மின்னஞ்சல் முகவரி | : | |
| 8. | ஆதார் அட்டை எண் குறிப்பிடவும்<br>(ஒளிநகல் இணைக்க வேண்டும்) | : | |
| 9. | வாக்காளர் அடையாள அட்டை எண்<br>(ஒளிநகல் இணைக்க வேண்டும்) | | |
| 10. | சாதி மற்றும் மதம்<br>(வட்டாட்சியர் சான்று இணைக்கப்படவேண்டும்) | : | |
| 11. | பிறந்த தேதி மற்றும் வயது<br>(சான்றிதழ் நகல் இணைக்க வேண்டும்) | : | |
| 12. | கல்வி தகுதி<br>(சான்றிதழ் நகல் இணைக்க வேண்டும்) | : | |
| 13. | உடற்தகுதி சான்று<br>(அரசு மருத்துவரிடம் பெறப்பட வேண்டும்) | | |
| 14. | இதர தகுதிகள் ஏதும் இருப்பின் அதன் விபரம்(சான்று நகல் இணைக்க வேண்டும்) | : | |
| 15. | காவலர் பணியில் முன் அனுபவம் இருப்பின் அதன் விபரம் (சான்று நகல் இணைக்க வேண்டும்) | : | |
| 16. | நன்னடத்தைச் சான்று–இரண்டு அரசிதழ் பதிவுபெற்ற அதிகாரியிடம் 20.09.2023க்கு பின்னர் பெறப்பட்ட நன்னடத்தைச் சான்று (சான்று நகல் இணைக்க வேண்டும்) | : | |
| 17. | குற்றவியல் நடவடிக்கை ஏதும் நிலுவை இல்லை என்பதற்கான சான்று (விண்ணப்பதாரர் வசிக்கும் எல்லைக்குட்பட்ட காவல் நிலையத்தில் பெற்று நகல் இணைக்க வேண்டும்) | : | |

இடம்:

நாள்: விண்ணப்பதாரரின் கையொப்பம்

# உறுதி மொழி

நான் இந்து மதத்தை சார்ந்தவர் என்றும், விண்ணப்பப் படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மை என்றும் வேலை வாய்ப்பு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விபரங்களையும் அறிந்து கொண்டேன் எனவும் உறுதி அளிக்கிறேன்.

**விண்ணப்பதாரர் கையொப்பம்**

## இணைக்கப்பட்டுள்ள சான்றுகள் சரிபார்ப்பு பட்டியல்

| வ.எண் | சான்று விபரம் | சான்று இணைக்கப்பட்ட விபரம் |
|---|---|---|
| 1 | நிலையான முகவரி சான்று நகல் | ஆம்/இல்லை |
| 2 | ஆதார் அட்டை நகல் | ஆம்/இல்லை |
| 3 | வாக்காளர் அடையாள அட்டை நகல் | ஆம்/இல்லை |
| 4 | வட்டாட்சியர் சாதி சான்று நகல் | ஆம்/இல்லை |
| 5 | பிறந்த தேதி சான்றிதழ் நகல் | ஆம்/இல்லை |
| 6 | கல்வித் தகுதிச் சான்று நகல் | ஆம்/இல்லை |
| 7 | உடற்தகுதி சான்று நகல் | ஆம்/இல்லை |
| 8 | இதர தகுதிகள் சான்று நகல் | ஆம்/இல்லை |
| 9 | காவலர் பணி முன் அனுபவ சான்று | ஆம்/இல்லை |
| 10 | நன்னடத்தை சான்று நகல் | ஆம்/இல்லை |
| 11 | காவல்துறை சான்று | ஆம்/இல்லை |
| 12 | சுயவிலாசமிட்ட அஞ்சல் உறை | ஆம்/இல்லை |

**விண்ணப்பதாரர் கையொப்பம்**

அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

1. விண்ணப்பப் படிவம் எண்.
2. விண்ணப்பம் வரப்பெற்ற நாள்.
3. இணைக்கப்பட்டுள்ள சான்றுகள் விபரம்.

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |